## தொழிலாளர் போராட்டமும் அரசும்...

சாம்சங் தொழிலாளர் போராட்டத்தில், அரசின் நிலைபாடுகளைச் சிலர் விமர்சித்து வருகின்றனர். இந்த நிலையில், தமிழ்நாட்டு மக்களின் வேலை வாய்ப்பு, தொழிலாளர்கள் சங்கம் அமைக்கும் உரிமை ஆகியவற்றில், நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்ன என பத்திரிகையாளர் ம.சுசித்ரா அவர்களின் பதிவு கவனிக்க வைக்கிறது.

"சென்ற தலைமுறைவரை வறுமையிலும், கீழ் நடுத்தர வாழ்க்கைச் சூழலிலும் உழன்ற பலர், தற்போது பன்னாட்டு நிறுவனங்களில் மாதச் சம்பளமாக லட்சங்களில் பெறும் சூழல், தமிழ்நாட்டில் கடந்த கால் நூற்றாண்டில் கனிந்துள்ளது. அப்படி தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டவர்கள்தான், இன்று சாம்சங் நிறுவன தொழிலாளர்கள் போராட்டத்தில், அரசு தொழிலாளர் விரோத போக்கைக் கையாள்கின்றது என்று வாதம் செய்கிறார்கள்.

தமிழ்நாடு அரசு தலையிட்டு, இரு தரப்பினரையும் அழைத்து 7 கட்ட பேச்சுவார்த்தை நடத்தியும், எந்தவித உடன்பாடும் எட்டப்படாத நிலையில் தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நேரடியாக சாம்சங் தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். இதன்பிறகு, இந்த மாதம் முதல் ரூ.5,000 சம்பள உயர்வு, தொழிலாளர்களுக்கு 108-ஏ.சி பேருந்துகள் உள்ளிட்ட 14 கோரிக்கைகளை நிறைவேற்ற நிறுவனம் ஒப்புக் கொண்டுவிட்டது. ஆனாலும், தொழிற்சங்கம் தொடங்குவது என்கிற முதன்மையான கோரிக்கைக்கு, சாம்சங் நிறுவனம் ஒப்புதல் அளிக்க மறுப்பு தெரிவித்து வருகிறது.

இரு தரப்புப் பேச்சுவார்த்தையில் இருக்கும்போது, தொழிலாளர் தரப்பு நீதிமன்றத்தை நாடியுள்ளது. அதனால், அதற்கான தீர்வு நீதிமன்றத்தின் வழியாக கிடைக்கும்வரை, இருவரும் தீர்ப்புக்காகக் காத்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள். சாம்சங் தொழிலாளர்கள் போராட்டத்தில் இதுதான் நடந்திருப்பதாகத் தெரியவந்துள்ளது. இதனை அறியாமல், அல்லது இதனை மறைத்து, பலர் இது தமிழ்நாடு அரசு, தொழிலாளர்களுக்கு இழைக்கும் துரோகம் எனப் பரப்பி வருகின்றனர்" எனக் கூறியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





எஸ்.ஏ.அம்பிகாபதி

### பொற்கிழி அளித்து சிறப்பு!

1996-ஆம் ஆண்டு திருச்சியில் தி.மு.கழகத்தின் 8-வது மாநில மாநாடு, ஜனவரி 26, 27 மற்றும் 28 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கழகம் மாபெரும் வெற்றியை வசமாக்கியது. இந்நிலையில், மாநில மாநாட்டை வெற்றிமாநாடாக நடத்திக் காட்டிய செயல் வீரர்களைப் பாராட்டும் வகையில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் பொற்கிழி அளித்து, சிறப்பு செய்தார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது. இன்றைய முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு உடனிருந்தார்.

– எஸ்.ஏ.அம்பிகாபதி,
அவைத்தலைவர், திருச்சி வடக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ஆதரிப்பவர் ஒரே ஒருவர்!

1938-ஆம் ஆண்டு, இந்தி கட்டாயம் என அறிவிக்கப்பட்ட போது, காங்கிரஸ் கட்சியில் இருந்த தமிழர்கள்கூட உள்ளூர விரும்பவில்லை. காங்கிரசை விட்டு விலகி, இந்தி எதிர்ப்புக்குக் குரல் கொடுக்கத் தொடங்கினார் நாவலர் சோமசுந்தர பாரதியார். சட்டமன்றத்தில் பேசிய ராஜாஜி, "இந்தியை எதிர்ப்பவர்கள் யார்? இரண்டே இரண்டு பேர்தான்! ஒருவர் ராமசாமி நாயக்கர், மற்றொருவர் பசுமலை பாரதியார்" என்றார். எதிர்வரிசையில் அமர்ந்திருந்த ஏ.டி.பன்னீர்செல்வம் உடனே எழுந்து, "எதிர்ப்பவர் இருவர். ஆனால், இந்தியைக் கொண்டு வருபவர் நீங்கள் ஒருவர்தான். ஆகவே, பெரும்பான்மை எதிர்ப்பின் பக்கம்தான்" என்று பதில் கூறினார். அந்தப் பதில் இந்தி எதிர்ப்புக்கு வலுசேர்த்தது.

## சீரணி ⟹ இளைஞர் அணி

32

ந.வினோத்குமார்

தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் 'சீரணி முதல் இளைஞர் அணி வரை'...

ஓவியம் : ரவி பேலட்



# கலைஞருக்கு, சீரணி தந்த பொன்விழா பரிசு!

தமிழ்நாடு எல்லா வகையிலும் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்து வருகிறது. குடிசை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம் போன்ற புதிய வாரியங்களை இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாடுதான் உருவாக்கியது. போலவே 'சீரணி' என்னும் தொண்டர் படையையும் தமிழ்நாடு உருவாக்கியது.

பேரறிஞர் அண்ணா தொடங்கிய அந்த அமைப்பு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொன்விழா பிறந்த நாளில் பெருமைக்குரிய சாதனை ஒன்றைச் செய்தது.

1973-ஆம் ஆண்டு, சைதாப்பேட்டையில் நரிக்குறவர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் தங்கிப் படிக்கும் விடுதியொன்றை உருவாக்க, தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. அந்தப் பணியைச் சீரணியினர் மேற்கொண்டனர்.

அதனை முன்னிட்டு, மே 8-அன்று சென்னை மாவட்ட சீரணித் தலைவர் நீல. நாராயணன் தலைமையில், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என்.வி.நடராசன் அடிக்கல் நாட்டினார்.

அப்போது அமைச்சர் நடராசன் ஆற்றிய உரையை 1973 ஜூன் 1 ஆம் தேதியிட்ட 'தமிழரசு' இதழ் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளது:

"மிக மிக அடிமட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நரிக்குறவர் மாணவர்கட்கு இந்த விடுதி கட்டித் தரப்படுகிறது. இந்தியாவிலேயே ஒவ்வொன்றுக்கும் வழிகாட்டியாக நாம்தான் இருக்கிறோம். அதுபோலவே இந்த விடுதி கட்டித் தருவதிலும் தமிழகம்தான் வழிகாட்டியிருக்கிறது.

தமிழ்நாட்டில் சீரணியின் பணிகளை டெல்லியில் உள்ள அமைச்சர்களும் அதிகாரிகளும் பாராட்டி வருகின்றனர். இந்தத் திட்டம் எப்படிச் செயல்படுகிறது என்பதையும் நேரில் கண்டு சென்றிருக்கின்றனர்.

**சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களின் கண்ணீரைத் துடைப்பதுதான் கலைஞரின் கொள்கையாகும்.**

ஓர் இயக்கத்தைப் பெரிதாக நடத்தி விட்டால் மட்டும் போதாது. அந்த இயக்கத்தில் உள்ள முன்னோடிகள் தீட்டித் தருகின்ற திட்டத்தை நிறைவேற்றுவதில்தான் பெருமையே இருக்கிறது. அண்ணாவால் உருவாக்கப்பட்ட சீரணி, கலைஞர் தலைமையில் மிகச்சிறந்த பணிகளைச் செய்து வருகிறது என்பதற்கு, இந்த விடுதியே ஒரு சான்றாகும்".

பின்னர், அந்த நிகழ்ச்சியில் பேசிய நீல. நாராயணன், "சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களின் கண்ணீரைத் துடைப்பதுதான் கலைஞரின் கொள்கையாகும். அதனால், அவருக்கு இந்த விடுதியைப் (பிறந்தநாள்) பரிசாக அவருக்கு அளிப்பதில்தான் பெருமையே இருக்கிறது" என்றார்.

அந்த விடுதியை, முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3-அன்று அமைச்சர் நாவலர் தலைமையில் கலைஞர் திறந்து வைத்தார்.

...வெற்றிநடை போடும்.

## பொய்ப்பெட்டி

32

கோவி.லெனின்

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."




2015 ஆம் ஆண்டு, செம்பரம்பாக்கம் ஏரி முன்னறிவிப்பின்றி திறகப்பட்டதால் மிதந்த சென்னை.



# கேள்வி கேட்பவர்களின் லட்சணம்?

**மெரினா கடற்கரையில் நடந்த விமான சாகச நிகழ்வின்போது 5 பேர் இறந்ததற்கு தி.மு.க.அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என்று அ.தி.மு.க.,பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் சொல்கின்றனவே?**

சாகசத்தை நடத்தியது இந்திய விமானப் படை. அது தி.மு.க. அரசின் படை அல்ல. முப்படைகளின் நிர்வாகம் என்பது ஒன்றிய அரசின் பொறுப்பில் உள்ளது. அந்தப் படையின் சாகசத்தை, மெரினாவில் மக்கள் கண்டுகளிக்க வேண்டும் என்பதற்கான ஏற்பாடுகளையும் ஒத்துழைப்பையும் வழங்கியது, தமிழ்நாடு அரசு. காவல்துறையினர் முதல் மருத்துவத் துறையினர், மாநகராட்சிப் பணியாளர்கள் வரை சாகசத்திற்கான ஒத்திகை நடைபெற்ற நாளிலிருந்தே ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

**விருகம்பாக்கத்திலும் வியாசர்பாடியிலும் விடியற்காலையில் நெரிசலை உண்டாக்கி, பலரின் உயிரைப் பறித்ததை அ.தி.மு.க. ஒப்புக்கொள்கிறதா?**

ஏறத்தாழ 15 இலட்சத்திற்கும் மேலான மக்கள் ஒரே இடத்தில் திரண்ட நிலையிலும், நெரிசல் ஏற்படவில்லை. ஒருவர் மீது ஒருவர் இடித்துத் தள்ளி கீழே விழுந்து, ஏறி மிதித்து மூச்சுத் திணறி மரணங்கள் நிகழவில்லை. வெயிலின் தாக்கம், நீர்ச்சத்துக் குறைபாடு, அதனால் ஏற்பட்ட மாரடைப்பு இவைதான் மரணத்திற்குக் காரணம் என்று மருத்துவ அறிக்கைகள் தெளிவாகத் தெரிவிக்கின்றன. தமிழ்நாட்டின் முதலமைச்சராக இதற்கானப் பொறுப்பை ஏற்று, நிவாரண நிதி வழங்கியதுடன், இனி இத்தகைய குறைபாடுகளும் இல்லாத வகையில், ஏற்பாடுகள் செய்யப்படும் என்று பொறுப்பை உணர்ந்து அறிவித்திருக்கிறார்.

அவரை நோக்கி கேள்வி கேட்பவர்களின் லட்சணம் என்ன? மகாமக குளத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளின்றி குளிக்கப் போய் நெருக்கடியை உண்டாக்கி, அரை நூறு பேரைச் சேற்றில் புதைத்து சொர்க்கத்துக்கு அனுப்பிய அ.தி.மு.க. பதில் சொல்லுமா? செம்பரம்பாக்கம் ஏரியை முன்னறிவிப்பின்றித் திறந்துவிட்டு செயற்கை வெள்ளத்தை உருவாக்கி, பல நூறு பேரைக் கொன்ற அ.தி.மு.க.விடம் பதில் உள்ளதா?

வெள்ள நிவாரண நிதிக்கான டோக்கன் வழங்குவதாக சொல்லி, விருகம்பாக்கத்திலும் வியாசர்பாடியிலும் விடியற்காலையில் நெரிசலை உண்டாக்கி, பலரின் உயிரைப் பறித்ததை அ.தி.மு.க ஒப்புக்கொள்கிறதா?

கோத்ரா ரயில் எரிப்புக் கொடூரத்தைத் தொடர்ந்து, குஜராத் முழுவதும் அரசின் தயவில் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவெறிப் படுகொலைகளுக்கு பா.ஜ.க. பதில் சொல்லுமா? கும்பமேளா முதல் சாமியார்கள் தரிசனம் வரை, பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் ஏற்பட்ட கூட்டநெரிசல் பலிகளுக்குப் பதில் சொல்லுவார்களா?

...வினா தொடரும்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

626

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131